# விடுமுறை நாட்களில் அதிக பட்சம் ரூ.25

# மெட்ரோ ரயில் கட்டணம் குறைப்பால் மக்கள் மகிழ்ச்சி



சென்னை, பிப். 23–

மெட்ரோ ரயிலில் பயணிப்பதற்கான கட்டணம், சமீபத்தில் குறைக்கப்பட்டதால், விமான நிலையத்தில் இருந்து, விம்கோ நகருக்கு, விடுமுறை நாட்களில் 25 ரூபாய் கட்டணத்தில் பயணிக்கலாம்.

சென்னை விமான நிலையம் – விம்கோ நகர், பரங்கிமலை – எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் நிலையம் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. குறைந்த பட்ச கட்டணம், 10 ரூபாயும்; அதிக பட்ச கட்டணம், 70 ரூபாயாகவும் இருந்தது.

பயணியர் கோரிக்கையை ஏற்று, கட்டண குறைப்பு அறிவிப்பை, மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்டது. இதையடுத்து, குறைந்த பட்ச கட்டணம், 10 ரூபாய், அதிகபட்ச கட்டணம், 50 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது. இது, நேற்று முதல் அமலுக்கு வந்தது.

விமான நிலையத்தில் இருந்து, விம்கோ நகருக்கு, 'டோக்கன்' வாங்கி பயணம் செய்வோர், 50 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். டிராவல் கார்டு, மொபைலில், 'கியூ ஆர்' குறியீடு, பயன்படுத்தி பயணம் செய்வோருக்கு, 20 சதவீத கட்டண சலுகை வழங்கப்படுவதால், 40 ரூபாய் கட்டணத்தில் செல்லலாம்.

அதே போல், எம்.ஜி.ஆர்., சென்ட்ரலில் இருந்து, பரங்கிமலைக்கு, 40 ரூபாய் கட்டணத்தில் செல்லலாம். டிராவல் கார்டு, கியூ ஆர் குறியீடு பயன்படுத்தி பயணம் செய்வோர், 32 ரூபாய் கட்டணத்தில் செல்லலாம்.

ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்களில், அனைத்து பயணியருக்கும், 50 சதவீத கட்டண சலுகை வழங்கப்படுவதால், விமான நிலையம் – விம்கோ நகருக்கு, 25 ரூபாயிலும், பரங்கிமலையில் இருந்து, எம்.ஜி.ஆர்., சென்ட்ரலுக்கு, 20 ரூபாய் கட்டணத்திலும் செல்லலாம்.

ஞாயிற்றுகிழமை மற்றும் பொது விடுமுறை நாட்களில், மொத்த கட்டணத்தில், 50 சதவீத தள்ளுபடி மட்டும் வழங்கப்படும். டிராவல் கார்டு, கியூ ஆர் குறியீடு வசதிக்கு, தனிப்பட்ட, 20 சதவீத தள்ளுபடி கிடையாது. அனைத்து பயணத்துக்கும், பாதி கட்டணம் மட்டும் வசூலிக்கப்படும்.



விமான நிலையம் – விம்கோ நகர் இடையே மெட்ரோ ரயிலில் பயணித்தோர்.

ஒரு இடத்தில் இருந்து, மற்றொரு குறிப்பிட்ட இடத்துக்கு மட்டும் சென்று வர அனுமதிக்கப்பட்ட, டிரிப் கார்டு வசதி, ரத்து செய்யப்பட்டுள்ளது. ரயில் கட்டண குறைப்பால், மெட்ரோ ரயிலுக்கு, பயணியரிடையே வரவேற்பு அதிகரித்துள்ளது. ரூபாய், 100 செலுத்தி, ஒரு நாள் முழுதும் பயணம் செய்யும் வசதியில் மாற்றமில்லை; 2,500 ரூபாய் கட்டணத்தில், 30 நாட்கள் பயணம் செய்யும் கார்டு வசதியில் மாற்றமில்லை.

கட்டண குறைப்பு குறித்து, பயணியர் கூறியதாவது:

விமான நிலையத்தில் இருந்து, விம்கோ நகருக்கு, நேரடி பஸ் வசதி இல்லை. இதனால், விமான நிலையத்தில் இருந்து, பாரிமுனை சென்று, அங்கிருந்து, விம்கோ நகருக்கு, பஸ் மாறிச் செல்ல வேண்டும். 1 மணி, 45 நிமிடங்கள் வரை ஆகும். கட்டண செலவு 59 ரூபாய். மெட்ரோ ரயிலில், 54 நிமிடங்களில், 50 ரூபாய் கட்டணத்தில், குளு குளு வசதியில், அமைதியாக பயணம் செய்ய முடியும்.

பஸ் கட்டணத்தை விட, மெட்ரோ கட்டணம் குறைவாக இருப்பதாலும், கூடுதல் பாதுகாப்புடன் பயணம் செய்ய, ஏதுவாக இருப்பதாலும், மெட்ரோ ரயில் பயணம், பயணியருக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. இதனால், மெட்ரோவில் இனி, பயணியர் வருகை அதிகரிக்கும்.

இவ்வாறு, அவர்கள் கூறினர்.

**விமான நிலையத்தில் இருந்து, விம்கோநகர் வரையிலான மாற்றியமைக்கப்பட்ட, மெட்ரோ ரயில் கட்டண விபரம்**

| நிலையம் | கட்டணம் | சலுகை கட்டணம் |
|---|---|---|
| மீனம்பாக்கம் | 10 | 8 |
| நங்கநல்லுார் ரோடு/ ஆலந்துார் | 20 | 16 |
| கிண்டி/சின்னமலை/ சைதாப்பேட்டை/ நந்தனம்/ தேனாம்பேட்டை | 30 | 24 |
| டி.எம்.எஸ்/ஆயிரம் விளக்கு/ எல்.ஐ.சி., அரசினர் தோட்டம்/ எம்.ஜி.ஆர்., சென்ட்ரல்/ உயர் நீதிமன்றம்/ மண்ணடி | 40 | 32 |
| வண்ணாரப்பேட்டை/ தியாகராயர் கல்லுாரி/ தண்டையார்பேட்டை/புது வண்ணாரப்பேட்டை/ சுங்கசாவடி/ திருவொற்றியூர்/ விக்கோநகர் | 50 | 40 |

**விமான நிலையத்தில் இருந்து, கோயம்பேடு வழியாக, சென்ட்ரல் வரை**

| நிலையம் | கட்டணம் | சலுகை கட்டணம் |
|---|---|---|
| மீனம்பாக்கம் | 10 | 8 |
| நங்கநல்லுார் ரோடு/ ஆலந்துார் | 20 | 16 |
| ஈக்காடு தாங்கல்/ அசோக்நகர்/ வடபழனி/ அரும்பாக்கம் | 30 | 24 |
| சி.எம்.பி.டி.,/ கோயம்பேடு/ திருமங்கலம்/ அண்ணா நகர் கோபுரம்/அண்ணாநகர் கிழக்கு/ செனாய்நகர்/ பச்சையப்பன் கல்லுாரி/ கீழ்பாக்கம்/ நேரு பூங்கா/ எழும்பூர்/ எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் | 40 | 32 |
| பரங்கிமலை – ஆலந்துார் | 10 | 8 |

(ஆலந்துாரில் இருந்து, ஈக்காடுதாங்கல் வழியாக, எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் மெட்ரோ நிலையம் வரையான பயண கட்டண விபரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது)

ஞாயிற்றுக்கிழமை மற்றும், அரசு விடுமுறை நாட்களில், நிர்ணயித்த கட்டணத்தில், டிராவல்கார்டு, 'கியூ ஆர்' குறியீடு பயன்படுத்துதல் வாயிலான பயணத்துக்கு சலுகை கிடையாது. அன்று, அனைத்து வசதி பயணத்துக்கும் மொத்தத்தில், 50 சதவீத கட்டண சலுகை வழங்கப்பட்டுள்ளது.

ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்கள் தவிர, மற்ற அனைத்து நாட்களிலும், டிராவல் கார்டு அல்லது கியூ ஆர் கோர்டு பயன்படுத்துவோருக்கு, கட்டணத்தில், 20 சதவீதம் சலுகை உண்டு.